உ
சிவமயம்

Registered as a Newspaper in Ceylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ம் திகதி ஆரம்பமானது.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும், மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ௫௬] யாழ்ப்பாணம்:—தாரண ௵ ஆடி ௴ ௨௩௨ (1944 ஆகஸ்ட் ௴ 7 திங்கட்கிழமை) [இல ௩௪

## இந்தியச் செய்திகள்

### வார்தாவில் மகாத்மா காந்தி

வார்தா ஆக 3—

இன்று காலை மகாத்மாகாந்தி தமது தலைமை ஸ்தானமான வார்தாவுக்கு வந்து சேர்ந்தார். அவர் சரியாக இரண்டு வருடங்களுக்குப் பிறகு இங்கு வருகிறார்.

காந்தி ரயில்வண்டியிலிருந்து இறங்கியதும் ஸ்ரீமதி ஜானகிதேவி அவரது நெற்றியில் பஜாஜ் குங்கும திலகமிட்டு வரவேற்றார். பிறகு அவர் விசேஷமாக அலங்கரிக்கப்பட்ட மாட்டுவண்டியில் தமது வாசஸ்தலத்துக்குப் புறப்பட்டார். வழிநெடுக தொண்டர்கள் அணிவகுத்து நின்றார்கள். ஒவ்வொரு பெரிய ஸ்டேசனிலும் ஜனங்கள் தம்மைக்காணக் குழுமியிருந்ததால் அவர்களுக்குத் தரிசனமளிக்க ஏற்பட்ட சிரமத்தைத் தவிர பிரயாணத்தை நிம்மதியாகக் கழித்ததாய் நிருபர்களிடம் அவர் சொன்னார்.

சேவாக்கிராமம் செல்லும் வழியில் அவர் ஜம்னலால் பஜாஜின் பிரயாணிகள் விடுதியில் சிறிது தங்கினார். அங்கு டாக்டர் ஜீவராஜ் மேத்தா காந்தியடிகளைப்பரிசோதித்துப் பார்த்தார்.

### அச்சுநாடுகள் சரணடைய காந்திஜீ காட்டும் வழி

லண்டன் "டெயிலி வேக்கர்" பத்திரிகையின் நிருபருக்குப் பம்பாயில் பேட்டியளித்து அவர் கேட்ட பல கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் மகாத்மாகாந்தி பின்வருமாறு கூறினார்:—

'நான் தற்போது இருக்கும் நிலைமையிலிருந்து பின்வாங்க மறுக்கிறேன். நான் நினைப்பதைப்போல நேசதேச இலட்சியத்தின் தன்மை மாறியிருக்குமானால் எனது திட்டத்தை பிரிட்டன் அங்கீகரிக்க வேண்டும். அங்கீகரித்தால் மற்றதெல்லாம் தானாகவே பின்தொடர்ந்து நடக்கும். இல்லாவிட்டாலுங்கூட கலப்பற்ற ஆத்மார்த்த நேர்மையிலாவது எனது திட்டம் அங்கீகரிக்கப்படவேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

'வெறும்வார்த்தையினால் மட்டுமல்லாமல் செய்கையினால் இந்தியாவைச் சுதந்திர நாடாக்குவதைக் கொண்டு நேச நாடுகளின் ராணுவ நடவடிக்கைகளுக்கு எந்த விதமான பாதகமும் ஏற்படாது. இந்த உறுதிமொழியில் நேசநாடுகள் திருப்தியடையவேண்டும். இந்தியாவின் சுதந்திரத்தை பிரகடனம்செய்து அதேசமயம் அந்தப் பிரகடனத்தை கிரியாம்சையிலும் உண்மையில் நடத்திவைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் இது ஒன்றினாலேயே அச்சுநாடுகளின் நாடி தளர்ந்துவிடும். இந்தியாவின் சுதந்திர பிரகடனம் வெளியானதும் அச்சுநாடுகள் உடனே சரணாகதியடையாவிட்டாலதால் ஆச்சரியப்படவேண்டியிருக்கும்".

### "ஐம்பதுக்கு ஐம்பது வேண்டாம்"

#### வடஇலங்கைத் தேசிய சங்கத் தலைவரின் பேச்சு

யுத்தத்துக்குப் பிறகு உதிக்கப்போகும் புதிய யுகத்தில் இலங்கை பலமான ஒரு ஸ்தானத்தைப் பெற்றுக்கொள்வதற்காக ஒரு சமூகமென்ற முறையில் தாங்கள் உதவி செய்யவேண்டுமென்றும் அதற்காக ஐம்பதுக் கைம்பது கோரிக்கையை விட்டுவிடவேண்டியது அவசியமென்றும் வட இலங்கைத் தேசிய சங்கத் தலைவர் டாக்டர் என். எம். வன்னியசிங்கம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற லீகின் வருடாந்தக் கூட்டத்தில் வற்புறுத்தினார்.

டாக்டர் வன்னியசிங்கம் தம்முடைய பிரசங்கத்தில் பெரும்பான்மைச் சமூகத்தினரிடம் தமக்குப் பூரண நம்பிக்கை இருப்பதாகவும் தாம் பல வருடங்களாக அவர்களோடு வாழ்ந்திருப்பதாகவும் அவர்கள் முன் கோபக்காரர்களெனினும் கள்ளங்கபடமற்றவர்களெனவும் தாம் அறிந்ததாகக் கூறினார்.

"அவர்களுடைய எதிரிகளைப்போல வாழாமல் அவர்களோடு நாம் நண்பர்களைப்போல் வாழ்வோம். அதன்பிறகு நமக்கு நியாயமான நமது அரசியல் உரிமைகள் கிடைக்குமென்பதில் சந்தேகமில்லை.' எனவும் அவர் குறிப்பிட்டார்.

கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின:—

இவ்வருடத்திற்குள் அரசியல் சீர்திருத்த திட்டத்தைப் பரிசீலனை செய்ய இலங்கைக்கு ஒரு கமிஷனை அனுப்பத் தீர்மானித்ததற்காக குடியேற்றநாட்டு மந்திரிக்கு இந்த லீக் நன்றி தெரிவிப்பதுடன் முறையாக்கு மனப்பான்மையும் அனுபவமும் கொண்ட ஒருவரை அந்த கமிஷனுக்குத் தலைவராக நியமிக்குமாறு கேட்டுக்கொள்கிறது.

மொத்தத்தில் நாட்டு நன்மையை உத்தேசித்து அரசியல் சீர்திருத்த விஷயத்திலே பாரபட்சமின்றி முயற்சிசெய்யுமாறு இந்தச் சங்கம் ஒவ்வொருவரையும் கேட்டுக்கொள்கிறது. இலங்கை அரசியல் சீர்திருத்தம் என்ற வெளியீட்டை ராயல் கமிஷனரிடம் சமர்ப்பப்பதற்காக அதனை அச்சிட அவசியமான எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க இச்சங்கக் காரியதரிசிக்கு அதிகாரமளிக்கிறது.

#### திரு. மகாதேவாவுக்குப் பாராட்டு

உள்நாட்டு மந்திரி திரு. ஏ. மகாதேவா அரசியல் சீர்திருத்த விஷயத்தில் அனுஷ்டித்த கொள்கையை முற்றாகண யாழ்ப்பாண சங்கம் நிச்சயமாக அறிந்து கொள்ளாததவறுதையிட்டு இச்சங்கம், லீகவருந்துவதுடன், எதிர்பார்த்தபடியே நமது நிலைமையில் உறுதியாக இருந்ததற்காக மகாதேவாவைப் பாராட்டுகிறது.

## யுத்தச்செய்தித் திரட்டு

### பர்மாப்போர்முனை

''அமெரிக்கத் துருப்புகள் மிட்கினாவில் வடக்குநோக்கி முன்னேறின. மற்றப்பகுதிகளிலும் சிறு முன்னேற்றங்கள் நடைபெற்றிருக்கின்றன" என்று தென்கிழக்கு ஆசிய உயர்தர ராணுவபீட அறிக்கையொன்று கூறுகின்றது. காலநிலை மோசமாயிருந்த போதிலும் ராயல் விமானப்படையைச் சேர்ந்த கனரக வெடிகுண்டு விமானங்கள் இவ்வாரத்தில் இரண்டாவது தடவையாக மண்டலேயிலிருந்து இன்டாவரை செல்லும் புகையிரதப் பாதையைத் தாக்கின. மற்றொரு விமானப்படை அக்யாப் நகரைத் தாக்கின.

80 தினங்களாக நடைபெற்ற யுத்தத்தின் பின்னர் மிட்கினா நகரம் நேசதேசப்படைகளால் கைப்பற்றப்பட்டுவிட்டது. மிட்கினாவின் ஜனத்தொகை 7500. இந்நகரம் வடபர்மாவில் மண்டலேயிலிருந்து செல்லும் புகையிரதப்பாதையின் கோடியில் ஐராவதி நதி ஓரமாக இருக்கின்றது.

### பிரெஞ்சுப் போர்முனை

மேற்குப் போர்முனையின் ராணுவபீட அறிக்கை கூறுவதாவது:—பிரிட்டிஷ் துருப்புகள் ஜெர்மானியரிடமிருந்து வயர் நகரைக் கைப்பற்றிக்கொண்டுவிட்டன. காமண்ட் அரங்கத்தில் ஒருபிரிட்டிஷ் காலாட்படையும் டாங்கிப்படையும் கிழக்குத்திசையில் வாசோவை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கின்றன. ஆர்னக்குச் செல்லும் பாதையில் நேசப்படைகளுக்குக் கடுமையான எதிர்ப்புகள் இருந்து வருகின்றன.

### ருஷ்யப் போர்முனை

மாஸ்கோவில் உள்ள ராய்ட்டரின் விசேஷ நிருபர் டன்கன் கூப்பர் எழுதுவதாவது:- கௌனஸ் நகருக்கு வடக்கே திடீரென்று தாக்கிய சோவியத் படைகள் தீவிரமாக முன்னேறுகின்றன.

வார்ஸாவுக்குக் கிழக்கிலுள்ள ஜெர்மன்வரிசை முழுவதும் வீழ்ந்துகொண்டிருக்கிறது.

மாஸ்கோவில் வெளியிடப்பட்ட சோவியத் அறிக்கை கூறுவதாவது. நமது துருப்புகள் தொடர்ந்து வலுத்தாக்குதல் நடத்திப் பல நகரங்களைப் பிடித்துக்கொண்டன. லிதுவேனிய சோவியத் குடியரசில் ஒரு ஜில்லாவை செஞ்சேனை தன்வசமாக்கிக் கொண்டது. எல்லா யுத்த அரங்கங்களிலும் 63 ஜெர்மன் டாங்கிகளும் 76 சத்துரு விமானங்களும் நாசமாக்கப்பட்டன.

ருஷ்யத் துருப்புகள் போலிஷ் தலைநகரை வடக்கிலும் கிழக்கிலும் தெற்கிலும் வளைத்துக்கொண்டிருக்கின்றன. வார்ஸாநகர வீதிகளில் உக்கிரமான சண்டை நடக்கிறதென்றும் நகர மத்தியில் சில பகுதிகளையும், வடக்கிலும் தெற்கிலும் [illegible] களையும் [illegible] படைகள் கைப்பற்றிக்கொண்டன வென்றும் போலந்திலிருந்து ஒரு செய்தி வெளியானது.

### இத்தாலியப் போர்முனை

இத்தாலியில் எல்லாப் போர் அரங்கங்களிலும் கடுமையான சண்டை நடந்துவருகிறது. பிளாரன்ஸுக்குத் தெற்கே கிறேவ்நதிப் பள்ளத்தாக்கில் நேசத்துருப்புகள் புதிய இடங்களைக் கைப்பற்றிக்கொண்டிருக்கின்றன. பிளாரென்ஸுக்குத் தென்மேற்கில் உக்கிரமான சண்டை நடந்துகொண்டிருக்கிறது. இந்தியத் துருப்புகள் பெனஸ்மரா வென்னும் கிராமத்தைக் கைப்பற்றிக்கொண்டுவிட்டன.

### பசுபிக் போர்முனை

தென்மேற்கு பஸிபிக் ராணுவ மத்திய காரியாலய அறிக்கை கூறுவதாவது:— நேசதேசத்துருப்புகள் பிரிட்டிஷ் நியூகினியாவிலுள்ள டிரினிமூர் நதியைத் தாண்டி ஒரு மைல்தூரம் முன்னேறியிருக்கின்றன. இந்தப்பகுதியிலுள்ள நேசத்துருப்புகளை வளைத்துக்கொள்ள ஜப்பானியர் செய்த முயற்சி முறியடிக்கப்பட்டது. பிறகு, நூஎம்பூர் தீவுகளில் மேலும் 600 ஜப்பானியர் கொல்லப்பட்டனர்.

### பறக்குங் குண்டுகளால் ஏற்பட்ட சேதம்

பறக்கும் குண்டுகள் மீண்டும் லண்டன் உள்பட இங்கிலாந்தின் தென்ஜில்லாக்களைத் தாக்கின. வாசஸ்தலங்களுக்கும் சொத்துகளுக்கும் சேதம் ஏற்பட்டது. கடலின் ஏராளமான பறக்கும் குண்டுகள் சுட்டு வீழ்த்தப்பட்டன. இதுவரை 5340 பறக்கும் குண்டுகள் வீசப்பட்டதாகவும் இதனால் 4735 பேர் கொல்லப்பட்டிருப்பதாகவும் 14000 பேர்வரையில் காயமடைந்திருப்பதாகவும் திரு. சர்ச்சில் ஒரு செய்தியில் குறிப்பிட்டார்.

### போரில் சேர்ந்தால் துருக்கிக்கு விபரீதமேற்படும்

அங்காராவிலிருந்து ஜெர்மன் நியூஸ் ஏஜன்ஸி பின்கண்ட செய்தியைத் தெரிவிக்கிறது. பிரிட்டனின் நிர்ப்பந்தத்தின் காரணமாகத் துருக்கி ஜெர்மன் உறவை ரத்துச்செய்தால் துருக்கி தேசத்தார் இவ்வளவுகாலமாகப் பெருமையுடன் பாதுகாத்து வந்த செயல் சுதந்திரம் துருக்கிக்கு இல்லாமற்போய்விடுமென்று துருக்கி பிரதம மந்திரிக்கு ஜெர்மன் தூதரான வான்பேபன் கடுமையான முறையில் எடுத்துரைத்திருக்கிறார். துருக்கி போரில் சேர்ந்தால் அதனால் அந்நாட்டிற்குப் பெரும் விபரீதங்கள் விளையுமென்றும் வான்பேபன் எச்சரிக்கை செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் தாரணஹு
ஆடிமீ உகூ திங்கட்கிழமை

## துருக்கிய அரசு

துருக்கிய அரசினர்க்கு ஏனைய அரசினரிடத்தில் உண்மையான நம்பிக்கை யில்லையென்றும், அதனல் ஏனைய தத்துவ அரசினரும் துருக்கியரசில் அதிக நம்பிக்கை வைப்பதில்லையென்றும் யுத்த விவகாரங்களில் ஈடுபட்ட அநுபவஸ்தர்கள் காலந்தோறும் வெளியிடக் கேட்டுள்ளோம். இத்துருக்கியரசு, இப்படிக் காலந்தோறும் நிலைமாறி நிற்றலும் கொள்கைகளை மாற்றுதலும் இவ்வரசினரிடத்துள்ள பெலமின்மையேயெனச் சொல்லப்படுகின்றது. துருக்கியரசினர் வெளவால போல் ஒரு நிலையில நிற்பதின்றி வென்ற பக்கத்தைச் சாரும் குணமுடையரென முன்னரும் பலமுறை கண்டிக்கப்பட்டுள்ளனர்.

இப்பொழுது துருக்கியர் ஜர்மனியருடன் செய்துகொண்ட உடன்படிக்கைகளை யெல்லாம் தவிர்த்துப் பிரித்தானியரோடும் அமெரிக்கரோடும் சேர்ந்து நிற்கின்றனரென்ற செய்தி பிறக்கலாயிற்று; இந்தச் செய்தி இங்குள்ள மக்களுக்கெல்லாம் சந்தோஷத்தை விளைவிக்கின்றதென்பது நிசம். ஆனல், துருக்கியரசின் கூட்டுறவில் நம்பிக்கை வைக்கலாகுமோ என்பதுதான் ஆசங்கைக்கிடமான விஷயம். இந்த யுத்த ஆரம்ப காலத்திலே துருக்கியரசின கூட்டுறவை ஐக்கிய ராச்சியத்தினர் விரும்பியபோது துருக்கி, அதற்கு உடன்படாமல மறுத்துவிட்டு அகத்தே ஜர்மனியருக்குச் சார்பாகவே நின்றது. புறத்தே தான் பொதுமை வகித்து நிற்பதாகத் தெரிவித்தது. காரணம் அந்த நேரத்திலே ஜர்மனியர் வெற்றியடைந்து வந்ததாகத் துருக்கியரசிற்குப் புலப்பட்டமையேயாம். ஆனல் இப்பொழுது எங்கள் பிருத்தானியரும் ஏனைய ஐக்கிய ராச்சியத்தினரும் யுத்தத்தில வெற்றியடைந்து வருவதைக் கண்டு துருக்கியரசும் பிருத்தானிய அமெரிக்கருடன் உடன்படிக்கை செய்துநிற்கின்றதாம். அமெரிக்கருடன பிருத்தானியருஞ் சேர்ந்து துருக்கியரசைத் தமக்களுடன சிநேகம பூணும்படி கேட்டமையினலேயாகும் துருக்கியர் இப்பொழுது முடிந்த ஆரு இராச்சியத்துடனும் சினேகம் பூண்டாரென மரண்டு துருக்கிய மந்திரி இப்பொழுது தெரிவிக்கின்றார். அந்த ஐக்கிய தத்துவ ராச்சியத்தினர் ஆருவரும் இத்துருக்கியரசை இதற்கு முந்தியும் பலமுறை ஜர்மனியருக்குத் துருக்கியில் எவ்வகையான இடமுங் கொடுக்க வொண்ணுதென இதமாகவும், பின அச்சுறுத்தியுங் கேட்டவர்களல்லவா? அப்பொழுது துருக்கியரசு இடங்கொடாது இப்பொழுது இடங்கொடுத்த காரணம் அரச தந்திரிகள் அனைவரும் அறிந்த இரகசியமாகும்.

சென்ற 1920-ம் ஆண்டு தொடக்கம் 1939-ம் ஆண்டு வரையில துருக்கியரசு ருஷியருடன சிநேகம பூண்டிருந்தது. ஜர்மனியருக்கும ருஷ்யருக்கும் மலடைய கூட்டுறவுண்டான போது துருக்கியரசு பிருத்தானியரோடும ருஷியரோடும கூட்டுறவு கொண்டிருந்தது. பின்னர் 1941-ம் ஆண்டு தொடக்கமாகத் துருக்கியரசு தான் பொதுமை வகித்திருப்பதாகச் சொல்லிக்கொண்டு ஜர்மனியருக்குப் பயந்து ஒரு அளவிற்கு அவர்களுக்கு இடமுங்கொடுத்து வந்தது. இப்பொழுது நிலை மாறி நிற்கின்றது. "ஏகமனையாமல் தலையைப் பிடித்தல் முடியாது" என்றபடி இந்த யுத்தத்தில வந்த அபாயங்களோடு, தாமும தமது நாமம சவடமுறையல் ஒரு பக்கத்தைச் சார்ந்து நிற்றல முடியாதென்னுங் கருத்தமைய மிஸ்ரர். சேர்ஜில் துருக்கியரசின புதிய நிலையையிட்டுத் தெரிவிக்கின்றார். ஆங்கில பிரதம மந்திரி சொல்வது முழுவதும் நிசம். ஆனல், ஹிட்லர் துருக்கியைத் தாக்கினல் தான் துருக்கியரசரின் உண்மைநிலை தெரியுமெனச் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள்; "அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல் - உற்றுழித் தீர்வார் உறவல்லர்" என்பன போன்ற கொள்கைகளைப் பிருத்தானிய பிரதம மந்திரி யறியாதவரல்லர்.

## ஜெர்மன் வீழ்ச்சிக்குப் பிறகு ஜப்பான்மீது படையெடுப்பு

மெல்போர்ன் ஆக 4—

ஆஸ்திரேலிய பிரதம மந்திரி மிஸ்டர் கர்டின் இன்று ஒரு பிரசங்கத்தில் குறிப்பிட்டதாவது:-

ஒருவாரத்துக்குள்ளாகவோ இரண்டுவாரத்துக்குள்ளாகவோ ஜெர்மன் பூமியில யுத்தம் நடைபெற ஆரம்பித்துவிடும்.

ஜெர்மனியின் தோல்விக்குப் பிறகு பிரிட்டன், அமெரிக்க, ரஷ்யத் துருப்புகள் தளவாடங்கள் முழுவதும் ஜப்பானுக்கு எதிராக உபயோகப்பட வசதிகள் இரா: அவைகளைக் கொண்டுவந்து சேர்க்கப் போதிய கப்பல்கள் கிடையாது.

ரஷ்யாவை இதில சேர்த்து ம்பசியிருப்பதைக் கண்டு ஆச்சர்யமடைந்து அவரைக் கேட்டதற்கு அவர் பதிலளிக்கையில 'ரஷ்யா ஜப்பானுடன் போர் தொடுக்கவில்லை என்பது வாஸ்தவமே! என்று கூறிவிட்டு, நீண்டநேரத்துக்குப் பிறகு இருந்தாலும என்று கூறி முடித்துவிட்டார்.

## எங்கள் பட்டினத் தலைவருக்கு ஒரு பகிரங்கக்கடிதம்

ஐயா,

தங்களுக்கு நான் தெரிவிக்க வேண்டிய விண்ணப்பமொன்றுண்டு; தங்கள் பட்டின பரிபாலன எல்லையுள் அகப்பட்ட வண்ணார் பண்ணை மேற்கு 7-ம் வட்டாரத்திலே சிவலிங்கப்புளியடி-ஒட்டுமடம் தெருவிற்கும் தட்டார்தெரு ஐயனார்கோவிலடித் தெருவிற்குமிடையே காட்டுத்துறை யொழுங்கையென்றும் ஓடையொழுங்கையென்றும் ஒரு பிரதானமான ஒழுங்கையுண்டு; இந்த ஒழுங்கையினல் மோட்டார்ரதம், குதிரைவண்டி, மாட்டுவண்டி, றிக்ஷோ, சைக்கிள் எல்லாம போதல வருதலோடு ஆட்களும், விசேஷமாகப் பள்ளிக்கூடச் சிறுவர் சிறுமிபரும் போக்குவரத்துச் செய்வதைக் காணலாம். இப்படிப்பட்ட ஒழுங்கையின் மத்தியிற் சிலபாகத்தவர் மற்றையிடமெல்லாம், உங்கள் சங்கக்கட்டளைப்படிபோலும், வண்டிக்காரர் மக்கி, கல், மண் என்னும் வைகளை இறைக்குப் பத்தென்பது இருபது நாட்களின் முன் கொண்டுவந்து ஒழுங்கையின் நடுவழியிலேயே குவியலாகக் கொட்டிவிட்டுப் போனர்கள்; ஆனல இன்றைக்கும் அந்தக் குவியலகள மேலே சொல்லப்பட்ட எவ்வகையான வண்டிகளும் ஆண்களும் போதற்குமுடியாத பெரும் இடையூறாகக் கிடக்கின்றன; இதனல இந்த ஒழுங்கை வாசிகளும் இவ்வொழுங்கையாற் போக்குவரவு செய்வோரும் பெரிதும கஷ்டப்படுகிறார்கள்; இந்த ஒழுங்கையில இரண்டு கோயில்களுமுண்டு; அந்தக் கோயிலொன்றிலிருந்து சென்றவாரம நல்லூர்க் கந்தசுவாமி கோவிலுக்குப் "பிரதட்டைக் காவடி" அதாவது உருண்டுக்கொண்டு காவடியெடுக்கும் நியமம் பூண்ட சில அன்பர்கள், குறித்த மண்குவியல் கிடந்தமையினலே, தங்கள் நேர்த்திக்கடன்படி காவடியெடுத்துப்போக முடியாமல், பட்டினசங்கத்தாரின் அலட்சியத்தின் மேற பழியைச் சுமத்திவிட்டு, ஒழுங்கை முடியுமவரை நடந்து காவடியெடுத்துப்போய்த் தெருவில ஏறியபிறகு அங்கப்பிரதட்சணஞ் செய்துகொண்டு காவடியெடுத்துப் போனதை நான் நேரிற் கண்டேன்; குறித்த ஒழுங்கையிற் போடப்பட்ட மண்குவியல்கள் தாமாகவே பரவுண்ணுமோ என்றால், ஐயா, அப்போதைக்கு அவைகள் பரவுண்ணமாட்டா. ஆனதால் கூடிய சக்கிரத்தில இந்தக் கருமத்திற் கைவிட்டு இதனைப் பரவுவித்து ஒழுங்கையை ஒப்புரவாக்கி விட்டால் உங்களுக்குப் பெரும் புண்ணியமுண்டாகும்.

இப்படிக்கு
காட்டுத்துறை யொழுங்கைவாசி

## பைசாசத்தின் "சேட்டை"

இணுவில் வைத்திய சாலைக்கு அணமையிலுள்ள ஒரு வீட்டிலே சென்ற இரண்டு வாரமாக ஆச்சரியத்தோடும அச்சத்தோடும கூடிய சில செயல்கள் நடக்கின்றன. குறிக்கப்பட்ட வீட்டிலே பிரதானமாக மூன்று பெண்களும் ஒரு சிங்களச் சிறுமியும் வசிக்கிறார்களாம்; அப்பெண்கள் கன்னிகைகளாம். இந்தப் பெண்கள் சமூகத்திலே பாட்டும் சிழ்க்கையோசை முதலிய சத்தங்களும் கேட்கப்படுகின்றன; [illegible] இப்பெண்களின [illegible] கூப்பிடப்படுகின்றது; இப்பெண்கள் எங்கிருந்தாலும் இந்தச் செயல்களும் நிகழ்கின்றனவாம். இப்பெண்களை மோட்டாரதமூலமாக வேற்றிடத்திற்கு அகற்ற முயன்றபோது ரதத்திலும் பாட்டுகளும் ஒலியுங் கேட்கின்றன; 'ஐயோ' என்ற அவச்சத்தமும் இடையிடையே கேட்கப்படுகின்றதாம். சுவரில் மாட்டப்பட்டுள்ள படங்களின் சமூகத்திலும் பாடல் நடைபெறுகின்றதாம். இந்த ஆச்சரிய சம்பவத்தை இங்கிருந்து பலர் நேரிற்போய்ப் பார்த்துவந்து கூறினர்கள். சுன்னகத் தானத்திலுள்ள பொலிஸ் அதிகாரியும் இதனை நேரிற்சென்று பார்த்து ஆச்சரியத்தோடு மீண்டாரென அறியலானோம். இப்படியான நிகழ்ச்சி யாழ்ப்பாணப் பிரிவிலுள்ள வேறு கிராமங்களிலும் சில வீடுகளில் நடைபெறுவதாக முன்னரும் இப்பத்திரிகையில் நாம வெளியிட்ட ஞாபகமுண்டு; இந்தப் பயங்கரமான செயல் பில்லி சூனியத்தின் பயனாக நேர்வனவென்று முதியோர் சொல்லுகின்றனர்; குறித்த வீட்டில் யாரும மந்திரவாதி வந்து ஏதும் கிரியை செய்யும்போது இப்படியான சத்தங்களும பாட்டுகளும இல்லையாம; ஆனல மந்திரவாதி வீட்டைவிட்டகன்றவுடனே பழையபடி தொடங்கிவிடுகின்றனவாம.

## முஸ்லீம் லீக்குக்கு ராஜாஜி வேண்டுகோள்

வார்தா, ஆக, 4—

ஸ்ரீ. ராஜகோபாலாச்சாரியாரும் காந்திஜியின் காரியதரிசி ஸ்ரீ பியாரிலாலும் இன்று காலை இங்கு வந்து சேர்ந்தனர்.

'இந்திய தேசீய காங்கிரஸின் கோரிக்கைக்கு பிரிட்டிஷார்கள் அளித்திருக்கும் திட்டத்தைக்காட்டிலும், நாங்கள் முஸ்லீம் லீக் கோரிக்கைக்கு அளித்திருக்கும திட்டம அதிகமாகவே கோரிக்கையை முழுதும ஒப்புக்கொள்வதாயிருக்கிறது. அது மிகவும் பிராக்டிகலாயுமுள்ளது'

என்று ராஜாஜி இங்கு வந்தும் அளித்த பேட்டியில கூறினர். மேலும் அவர் கூறியதாவது:-

இரண்டு முக்கிய விஷயங்களைக் குறித்து மிகுந்த ஆறுதலளிக்கின்றன. முதலாவதாக வங்காளத்தைச் சேர்ந்த 50 பாரிஸ்டர்கள் இத்திட்டத்திற்கு ஆதரவளித்திருக்கின்றனர். ஹிந்து மகாசபைத் தலைவர்கள் தீவிரமாக எதிர்க்கும இச்சமயத்தில இவர்களது ஆதரவு மிகவும குறிப்பிடத்தக்கது.

இரண்டாவதாக விமானப்படையைச் சேர்ந்த 41 பேர்கள், காந்தியின் திட்டத்துக்குச் சம்பந்தமாக பிரிட்டிஷ் அரசாங்கம கொண்டிருக்கும பாராமுகத்தையும், இழுத்தடித்து வரும கொள்கையையும் பகிரங்கமாகக் கண்டித்திருப்பது ஓர் குறிப்பிடத்தக்க சம்பவமாகும.

நிலைமையின் கடுமையையும், ஆபத்தைச் செய்யும் தவறுதலையும் உணர்ந்தது விமானப்படை அதிகாரிகள் தங்களது வழக்கத்தை விட்டுவிட்டு அரசாங்கத்தை எச்சரிக்கப் பகிரங்கமாக முன்னுக்கு வந்திருப்பது எனக்கு மிகுந்த நம்பிக்கையை அளித்திருக்கிறது.

மற்றவர்கள் என்ன நினைப்பினும் 1942ம வருஷ பிரிட்டிஷ் திட்டம் எவ்வளவு குறைபாடுகள் உள்ளதாயிருந்தாலும், அதை நாம் அப்பொழுது ஏற்றுக்கொண்டிருந்திருக்க வேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம்.

முஸ்லீம் லீக் அதிகாரிகளான தவறை இப்பொழுது செய்யாது என்று நான் நினைக்கிறேன். தவறு செய்யப்படுமாகில அது ஓர் பெரிய அபாயகரமான தவறாக ஆகிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தமிழ்

(இணுவை, வை. அநவரதவிநாயக மூர்த்தி)

(முற்றொடர்)

இயற்றமிழ் இலக்கியமாவன: எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு, சிற்றட்டகம், குணநாற்பது, முத்தொள்ளாயிரம், ஐம்பெருங் காப்பியங்கள், ஐஞ்சிறு காப்பியங்கள், தகடூர் யாத்திரை, இரும்பல் காஞ்சி, மாடலம், அரும்பைத் தொள்ளாயிரம், வச்சத் தொள்ளாயிரம் முதலிய பல சங்க நூல்களாம. இவையன்றிச் சைவ, வைணவ, ஆருகத, பௌத்த முதலிய சமய நூல்களும, இதிகாச மகாபுராணங்களின் மொழிபெயர்ப்பு நூல்களும், பல தல புராணங்களும, சிற்பம், கணிதம், சோதிடம், வைத்தியம், நிமித்தம் முதலிய பல நல்ல நூல்களுமாம. பிற்காலத்துள்ள பிள்ளைத்தமிழ் முதலிய பிரபந்தங்களைச் சார்ந்தனவாகிய ஆயிரக்கணக்கான நூல்களும் இயற்றமிழ் இலக்கிய மெனப்படும்.

பௌத்தசமயத்தார் தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பெரிதும் உதவிசெய்திருக்கிறார்கள். இதற்குச் சான்று மணிமேகலை, குண்டலகேசி, பிம்பசாரகதை முதலிய இலக்கியங்களும், வீரசோழியமென்னும் இலக்கண நூலுமே.

இனிச் சிறிது இசைத்தமிழை ஆராய்வாம. இசைத்தமிழ்ப் பாகு பாடுகளையும், நாடகத்தமிழ்ப் பாகுபாடுகளையும் அறிதற்குச் சிலப்பதிகாரமொன்றுமே இக்காலத்துள்ளதாகும். சங்கீத வகையைப் புலப்படுத்தும் இலக்கண நூல்களும் இலக்கிய நூல்களும் இசைத்தமிழ் நூல்களாம. பெருநாரை, பெருங்குருகு, பஞ்சபாரதீயம், இசைநுணுக்கம், பஞ்சமரபு, தாளசமுத்திரம், சச்சபுடவெண்பா, இந்திரகாளியம், பதினுறுபடலம், தாளவகை யோத்து, இசைத்தமிழ்ச் செய்யுட்டுறைக் கோவை, முதலாகப் பல இசைத்தமிழ் நூல்கள் பண்டைக்காலத்தில இருந்தன. இவையொன்றேனும் இக்காலத்தில இல்லை, சிலநூல்களின சூத்திரங்கள் மாத்திரம் உரையுடன கிடைக்கின்றன.

இக்காலத்திற் சங்கீத சம்பந்தமாய் வடமொழியில் வழங்கும் ஸ்வரப் பெயர்களாகிய ஷட்ஜம, ரிஷபம், காந்தாரம, மத்தியமம், பஞ்சமம், வைதம், நிஷாதம என்னும ஏழும் தமிழில் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம எனபவற்றிற்குச் சரியான வை.

இந்த ஏழுவகை ஒலிப்பிரிவுகளை ஏழு நரம்புகள் என்றும் கூறுவர். இவைகளைக் குறிப்பதற்குத் தமிழ் மொழியிலுள்ள உயிரெழுத்துக்களில, ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ, என்னும ஏழு நெட்டெழுத்துக்களையும முன்னோர் பயன்படுத்தி வந்தார்கள். இப்போது அவை 'சரிகமபதநிச' எனப்படுகின்றன.

பண்களும், திறங்களும் இந்த ஏழினின்றும் உண்டாவன. பண்கள் ஏழு ஸ்வரத்தோடு கூடிய இராகங்கள். இந்த இராகங்கள் ஸம்பூர்ண ராகங்களெனவும், ஜனகராகங்களெனவும், மேளகர்த்தாக்களெனவும் வடமொழியில் வழங்கப்படும். திறங்கள் பண்களுள் ஒவ்வொன்றிலிருந்தும உண்டாகப் பலவகைப்பட்டு வேறு பெயர்பெற்று வழங்கும்; ஏழிற் குறைந்த ஸ்வரங்களையுடையனவெனறும ஜன்னியராகங்களென்றும இவை கூறப்படும்.

பண்களிலபலவகைகள் இருக்கின்றன. புறநீர்மை முதலிய பண்கள் பன்னிரண்டும் பகற் பண்களெனவும், தக்கராகம் முதலிய ஒன்பதும் இராப்பண்களெனவும் செவ்வழி முதலிய மூன்றும் பொதுப்பண்களெனவும் கூறப்படும். இன்னும் பண்கள், பெரும் பண்கள் குறிஞ்சி முதலிய ஐந்திணைக்குரிய பண்கள், சிறுபொழுது, பெரும்பொழுதாகிய அவ்வாறற்குமுரிய பண்கள் முதற் புலவகைப்பட்டு வழங்கும். எந்தக் காலத்திற்கு எந்தப் பண்ணைப் பாடவேண்டுமோ அதையே தவறின்றிப் பாடவேண்டும். அங்ஙனம் பாடினாலன்றிக் கேட்கும் மனிதர்க்கும், மிருகங்களுக்கும், பறவைகளுக்கும் இன்பம பிறவாது. அதுவுமன்றி, தவறிப்பாடினுற் பெரியோர் அதைக் குற்றமென்று எடுத்துக் கொள்ளுவர்.

காலைநேரத்துக்கு மருதப் பண் உரியது. மாலை நேரத்துக்குச் செவ்வழிப்பண் உரியதாம். மதுரைக் காஞ்சி முதலிய நூல்களிலும் இது விளங்கும்.

இசையைப்பற்றிக் கூறும்பொழுது சில வாத்தியங்களைப்பற்றியும் இங்கு குறிப்பிடவேண்டியிருக்கிறது. வேய்ங்குழல் முதலிய வாத்தியங்கள் பல இருந்தன. அவற்றுள் வேய்ங்குழலையே முதன்மையுள்ளதாக மதித்து வந்தார்கள். வேய்ங்குழல் முதலிலும் பின்னர் அதன் வழியே மற்ற வாத்தியங்களையும் அமைத்திருக்க வேண்டுமெனத் தெரிகிறது.

"குழல்வழி நின்றது யாழே; யாழ் வழித்
தண்ணுமை நின்றது தகவே; தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே; முழவொடு
கூடி நின்றிசைத்த தாமந்திரிகை"

என்று சிலப்பதிகாரத்திலும்,

"குழல்வழி யாழெழீஇத் தண்ணுமைப் பிற்றர்
முழவியம் பலாமந் திரிகை'

எனக் கூத்தநூலிலும்வேய்ங்குழலை முதலில் வைத்துக் கூறப்பட்டிருக்கிறது.

யாழும் வீணையும் ஒன்றென்பர். இவை பழைய நூல்களில வேறுபடக் கூறப்பட்டிருக்கின்றன. யாழ் நான்கு வகைப்படும என்று பழைய நூல்களிலிருந்து தெரிகின்றது. இதைவிட யாழின் வகைகள் பல இருக்கின்றன.

முழவு ஒருவாத்தியம். அது அகமுழவு, அகப்புறமுழவு, புறமுழவு, புறப்புறமுழவு என நான்கு வகைப்படும். முரசு என்னும் ஒரு வாத்தியம் மிகப் பெருமை வாய்ந்தது. இதை அரசர் பூசித்து வந்தார்கள். அரசர், பகைவரோடு போர்செய்யப் போவதற்குமுன் நல்லவேளை பார்த்து இதனை அனுப்புவது வழக்கம். அச்செயலுக்கு முரசு நாட்கோளென்பது பெயர். இதுபுறநானூறு முதலியவற்றில் இருந்து அறியலாம. மணமுரசு, கொடைமுரசு, வீரமுரசு என மூன்று வகையுண்டு. இன்னும் சிறுபறை, கஞ்சதாளம், கொம்பு, நெடுவங்கியம், குறுந்தூம்பு, தட்டை, சலஞ்சலம், ஒருகண் மாக்கிணை முதலாகப் பற்பல வாத்தியங்கள் இருந்தனவென்று பத்துப்பாட்டு முதலியவற்றால தெரிகின்றது.

சங்ககாலத்தில் நாடக இலக்கியங்களும இலக்கணங்களும் மிகுதியாக இருந்தன. சில இலக்கியங்கள் நாடக காப்பியங்கள் என்ற பெயருடன் வழங்கி வந்தன என்று தெரிகிறது. அக்காலத்தில நாடகக்காட்சி எல்லாராலும் கண்டு இன்புறப்பெற்று வந்தது. நாடகம், இசைப்பாட்டோடும யாழ்க் கருவியோடும கூடி விளங்கி வந்ததென்றும் தெரிகிறது. பின்வரும் வரிகளிலிருந்து இவைகளை அறிந்துகொள்ளலாம,

"கூத்தாட் டவைக் குழாத்தற்றே
பெருஞ் செல்வம்
போக்கு மதுவிளிந்தற்று" (திருக்குறள்)

"பாடலோர்த்தும் நாடகம் நயந்தும்"
(பட்டினப்பாலை)

"பாடல்சால் சிறப்பிற் பரதத்
தோங்கிய நாடகம விரும்ப"
(மணிமேகலை)

(தொடர்ச்சி 6 ம் பக்கம்)

# வான்மீகியும் கம்பரும்

(K. S. கிருஷ்ணன்)

(முற்றொடர்)

## இயற்கைத் திறையும் கதையின் காட்சியும்

வான்மீகி இயற்கையழகில் ஈடுபட்ட உள்ளத்தவர். ஆச்சிரம வாஸமும், ஆற்றுப்பெருக்கும் மலைகளின் உன்னதமான காட்சிகளும், பருவகாலங்களுக்கேற்ப இயற்கையின் எழிலமாறும் விசித்திரமும், அவரது உள்ளத்தில் அழுந்தியிருந்தமையால், இயற்கையினழகைத் திறமையாகவமைத்து இராமாயணக்கதையின் முக்கிய சம்பவங்களைக் காட்சிகளாகச் செய்துள்ளார், கம்பரும் அநேகமாக முதனூலைப் பின்பற்றியே பாடியுள்ளார்.

இராமனுக்கு இளவரசுப் பட்டங்கட்டவாலோசித்து முதலைந்தனனுன வசிட்டனுக்குத் தசரதன்,

'சைத்ர: ஸ்ரீமாநயம் மாஸ:
புண்ய: புஷ்பித காநந:
யௌவ ராஜ்யாய ராமஸ்ய
ஸர்வமே வோப கல்ப்யதாம்'

'மாதங்களிற் சிறந்த சித்திரை இப்போது நடக்கிறது. மிகவும் அழகான காலம. மரங்களெல்லாம் புஷ்பித்துக் கண்ணிற்கினிமையாயிருக்கின்றன. இராமனுடைய பட்டாபிஷேகத்திற்கு வேண்டியனவெல்லாம ஆயத்தமாகட்டும்' என்று உத்தரவிடுகிறுன். இராமனது யௌவனமும், திருவும், புனிதமான உத்தம குணங்களும், நறுமணங்கமழும் மலர்போன்று அன்புகமழும மனமும் இளவரசு வகிப்பதற்கேற்றகாலம் வந்ததென்பதைக் குறிப்பாக உணர்த்துகின்ற, மாதங்களிற் சிறந்த சித்திரை பூமுபூத்திருக்க, புருஷரிற்சிறந்த ஆராமன பொன்முடி சூடவேண்டுமென்று தசரதன விரும்புகிறுன.

ஆனல் தசரதன விருப்பம் நிறைவேறவில்லை. இராமனுக்கு அது ஒரு குறையில்லை, காட்டுக்குப் போகவேண்டுமென்று கேட்டவுடன

'அப்பொழுதலர்ந்த செந்தாமரையினை வென்றதம்மா'

என்று கம்பர் சொல்லுவது போல் மிகவும் மகிழ்ச்சியடைகின்ருன், காட்டுக்குச் செல்லுகிறுன். சித்திரகூடத்தில தங்குகிறுன். இயற்கையினழகைச் சீதையுடன அனுபவித்துக்கொண்டு இளையோன் அன்புடன் செய்யும் பணிவிடைகளையேற்றுக்கொண்டு வசித்துவருகிறுன், இளவேனிற் காலத்தில மந்தாக்கினியின மனோஹரமான காக்ஷியும், இளந்தென்றலும, புள்ளினங்களின இனியவிசையும, பூக்களின நறுமணமும், ஆச்சிரமவாஸமும பட்டண வாஸத்தையும மறக்கச் செய்கின்றன. ஸீதையும வனவாஸத்தை விரும்புகிறுள். இளையோன் மாத்திரம புழுங்குகிறுன.

இவர்கள் இவ்வாறிருக்கப் பரதன் சித்திரகூடத்துக்கு வந்து இராமனைத்திரும்ப அயோத்திக்கு வரும்படி யழைக்கிறுன. தசரதன மரணத்தைக்கேட்ட இராமன துயரமுற்று, பிறகு ஒருவாறுதேறி, நமக்கடன்களாற்றி, அவனது வாய்மையைக் காக்கும்பொருட்டு வனத்திலேயே வசிக்கத் துணிகிறுன். பட்டணத்தில் காட்டிலுள்ள சுகமும், ஏகாந்தமும் கவலையற்ற வாழ்வும் கிடைக்குமா? ஏற்கெனவே இளமையில் விசுவாமித்திரனுடன் சென்று வனவாஸத்தின் சுகத்தையறிந்தவனல்லவா இராமன்? ஆதலால் மாதனைத்தேற்றிப் பல நியாயங்களைக் காட்டித் தனது திருவடிகளைக்கொடுத்து அனுப்பிவிட்டு இனிச் சித்திரகூடத்திலிருந்தால் நகரமாந்தர் வந்து பின்னுந் தொந்தரவு செய்யக்கூடுமென்றெண்ணித் தண்டகவனம் புகுகிறுன்.

கோதாவரிக்கரையில பஞ்சவடி. வனவாசத்தை மேற்கொண்டவரசிளங்குமாரிருவரும், பிராட்டியாரும் மனமெய்களையடக்கிக் காய்கனியருந்தித் தூயவாழ்க்கை வாழ்ந்து வருகிறுர். பனிகாலம் வருகின்றது. வழக்கம்போல் அதிகாலையல இவர்கள் நீராடக் கோதாவரிக்குச் செல்லும்போது, இயற்கையினழகில் ஈடுபட்ட இளையோன் பனிகாலத்தின வனப்பை இராகவனுக்கு எடுத்துக் காட்டிக்கொண்டு நடக்கிறுன். அப்போது அயோத்தியையும், பரதனது துறவும் கைகேசியின் கொடுமையும் இலக்குவன் மனதில் தோன்றுகின்றன. இராமனைநோக்கி,

'அத்யந்தஸுகஸம்வ்ருத்த:
ஸுகுமார: ஸுகோசித:
சதம் நு அபர ராத்ரேஷு
ஸரயூம அவகா ஹதே'

'அண்ணு! மிகவதிக சுகத்தில் வளர்ந்தவனும், இளம்பிராயத்தனும், சுகத்திற்கே யுரியவனுமான பரதன், எவ்வாறு பின்னிரவில் இக்குளிர்காலத்தில ஸரயு நதியில் நீராடுகிறுன்?' என்று மிகவும் இரங்கி, 'கைகேயிமாத்திரம் ஏன் அவ்வளவு கொடுமையாக நடக்கவேண்டும்? அண்ணு!' என்று பழைய நினைவுகளை இராமன் மனதில் உண்டாக்குகிறுன். எல்லாவற்றையும் மறந்து இருந்த இராமனது மனம் பரதனைக்காண அவாவுறுகின்றது. கைகேசியைப்பற்றிக் குறைகூறின இளையோனை இராமன் கண்டிக்கின்ருன். பிறகு கோதாவரியில் நீராடி சீதையும இளையோனும் பின்தொடர ஆச்சிரமத்திற்கு வருகிறுன். அவ்வாறு வரும் காட்சியை வான்மீகி ஒப்பற்றவோர் சுலோகத்தில் சித்தரிக்கிறுர்.

'க்ருதாபிஷேகஸ்து ராஜ ராம:
ஸீதா த்வீதீய: ஸஹ லக்ஷ்ம
ணேந;
க்ருதாபிஷேகோ கிரிராஜபுத்ர்யா
ருத்ரஸ்ஸநந்தீ பகவாநிவேச:'

'ஸீதையும், இலக்குவனும் பின்தொடர நீராடிவரும் இராமன் மலைமகளும் நந்தியும் பின்தொடர நீராடிவரும் உருத்திரமூர்த்தியைப்போலிருந்தான' என்கிறுர்.

பின்வரும்கரதூஷணவதம்இராவணுதியர்வதம்இவைகளைக்குறிப்பாலுணர்த்துவானபோலவான்மீகி இச்சுலோகத்தில்இராமனை அழித்தற்கடவுளான உருத்திர பகவானுக்குவமிக்கிறுர். இராமாதியர் ஆச்சிரமத்துக்கு வந்துசேர்ந்து கொஞ்சநேரம் கழித்தபின்னர்,

'நீல மாமணி நிறநிருதர்வேந்தனை
மூலநாசம் பெறமுடிக்கு மொய்ம்பினுள்
மேல்நாள் உயிரொடும் பிறந்து
தானவிளை
கால மோர் ... துடனுறை கடிய
நோயனுள்'

... சூர்ப்பனகை இராமன் முன் தோன்றுகிருள்.

# வெங்கைக்கோவை

(திருமயிலை திருவாளர் சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை அவர்கள்)

## ஓர் சிற்றாராய்ச்சி

கோவை யென்பது அகப்பொருள் இலக்கணத்திற்கு இலக்கியமாக அமைந்த தமிழ்ப் பிரபந்தங்களுள் முதன்மையுடையது. ஓரின மணிகளை ஒழுங்குபடக் கோத்தல் போல அகப்பொருட் கிளவிகளை ஒழுங்குபடக் கோத்தலின் இது கோவை யெனப்பட்டது. இது களவு கற்பென்னும் இரண்டியல்களில் இருபத்தாறு கிளவிக் கொத்துகளால் நானூறு துறைகளைக் கொண்டு இயலுகின்றது. எழுத்து முதலிய ஐவகை இலக்கணங்களினும் வன்மையுடைய புலவர்களே கோவை பாடத் தகுதியுடையவர்கள். தமிழிற் கோவைகள் பல உள்ளன. அவையனைத்தும் ஓர் இலக்கண அமைதியுடையனவாயினும் ஆக்கியோரின் அறிவாற்றலின் திறங்களால் தனித்தனி பல நயங்களை அமைக்கப்பெற்றன.

வெங்கைக்கோவை யென்பது நடுநாட்டில் தேவாரம் பெற்றதும், பழமலை, முதுகுன்றம், விருத்தகாசி முதலிய பெயர்களையுடைய விருத்தாசலத்திற்கு இசானதிசையிலே நான்கு மைலுக்கு அப்பாலுள்ள வெங்கனூரில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியுள்ள பழமலைநாதரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளால் ஏறக்குறைய முந்நூறு வருடங்களுக்கு முன்னர் இயற்றப்பட்டது. கோவைகளுட் சிறந்தது மணிவாசகப்பெருமான் பாடியருளியதும் சிவபெருமான் தமது கையால் எழுதியருளியதுமாகிய திருச்சிற்றம்பலக் கோவையார். பொய்யாமொழிப்புலவர் பாடிய தஞ்சைவாணன்கோவை, நாடகவாசக நயபிலகப்பொருட்கு இலக்கியமாயுள்ளதே யாயினும் அது தஞ்சாக்கூரில் விளங்கிய ஓர் பிரபுவைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது. இறைவனைப் பாடப்பட்ட கோவைகளுள் திருக்கோவையாருக்கு அடுத்த சிறப்பினையுடையது திருவெங்கைக்கோவையாரும், இக்கோவையாசிரியரினுப நுகர்ந்தார்க்கலாற இதனருமை எடுத்தியம்புந் தகைமைத்தன்று. தஞ்சைவாணன் கோவையும் இதுவும் பல இடங்களில் ஒற்றுமையிருத்தலை இரண்டையும் ஒப்பு நோக்குவார்க்கு விளக்கமுறும். அகப்பொருட் கிலக்கியமாக இந்நூலை யாத்த சுவாமிகள் தாமும் அகப்பொருளாகவே இதனைப் பயின்று தெளிப்பாடினரென்று கூறலாம். விடயன் விளக்கம் பொருந்திய கற்பனைக் கவிகளாற் பாடியருளிய இந்நூல் இனிய ஓசையும், செய்யுளழகும் கற்றோர்க்கன்றி மற்றோர்க்குத் தெரியா. இவர் உள்ளுறையுவமம் பலதற்கு ஒருவித இன்பத்தை அளிக்கின்றது. அவர் எடுத்துக்காட்டும் உவமானப்பொருள்களை யாம் கேட்டுக் கண்டாற்போல நமக்குத் தோன்றும் துறைப்பொருட்குத் தக்கபடி பாட்டுடைத் தலைவனது சீர்த்தியைத் தொகுத்துக் கூறும் ஒற்றுமை இவ்வெங்கைக் கோவைக்கே உரியதாம்.

இந்நூலுள் வரும் திருக்குறட் கருத்துக்களும் தருக்க அலங்காரங்களும், உலகியல் வழக்குகளும் பறவும் படித்து இன்புறற்பாலன. வைகது பாராட்டுதற்குச் சில பாடல்களை ஈண்டுத் தருகின்றாம்.

"வாய்மையனாலும் புலாலைக்
கூவுதல் வாரணங்காள்
செய்யையழுவ மகரப்பூரித்த
கூட்டஞ் சிதைத்தெமக்குத்
தீமை பயந்தமையால் வெங்கை
நாயகர் செய்தவறத்
தூய்மையுணர்ந்தவர் வாய்மை
யன்றோ மெனச் சொல்லுவரே"

'பொய்ம்மையும் வாய்மையிடத்த
புரைதீர்ந்த
நன்மைபயக்கு மெனின்' என்னுந் திருக்குறட் கருத்தைக் கொண்டது.

"நான்ற சடிலத் திருவெங்கை
நாயகர் நல்குமொரு
கான்ற குருதிக் குடர்மாலை வேலு
டைக் காளை யெழில்
போன்ற வுருவத்திறைவர் மெய்
தோளிடு பூந்தொடைகண்டு
இன்றபொழுதிற் பெரிது வவா
கிற்கு மெம்மனமே"

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந்
தன்மகனைச்
சான்றோனெனக் கேட்டதாய்"

என்னுந் திருக்குறள் தொனித்தல் காண்க.

"நோக்கக் குழையுஞ் சிலையாளர்
வெங்கையினுண்ணிடையார்
மோக்கக் குழையு மனிச்சமென்
பூவின் முகத்திருத்தித்
தூக்கக் குழையும் பதங்கள் வெம்
பாலைச் சுடுபாலிற
நோக்கக் குழையுங் கொலோ குழை
யா தெங்கடையலுக்கே"

"மோப்பக் குழையு மனிச்சம்
முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து"

என்னுந் திருக்குறட் கருத்தைக் காணலாம்.

மெய்யா மிறைவர் திருவெங்கை
வாணர்தம் வெற்பில்வளைக்
கை யாளுடனவ் வருந்ததி மாதொப்
பவள் கற்பினென்றுந்
தொய்யாமருங் குலவள் வாழு
மூர்க்குப் புயல்களென்றும்
பொய்யாவிவளிடந் திங்கண் மும்
மாரி பெய்திடுமே"

"தெய்வந் தொழாஅள் கொழுநற்
றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யுமழை"

என்னுங் குறள் இங்கே நோக்கத்தக்கது.

மன்னிசை வெங்கை யுடையபிரான்
வரை மானநுசுப்பைப்
பொன்னிசை கொங்கை யொடித்
தாலுகிக்கை பொருந்துறுமை
மன்னிசை மென்குழ லேறன
மினனீர் விளங்கலிரோ
இன்னிசை வண்டினங்காள் காக
தாலிய மொப்பதுவே

காகதாலிய நியாயம் - தருக்க நூலுட் கூறப்படுவது. காகமேறப் பனம் பழம் விழுந்ததென்பது, ஆசிரியரின் தருக்கநூல் உணர்ச்சியைப் புலப்படுத்துகின்றது. தருக்க பரிபாஷை என்னும் ஓர் நூல் ஆசிரியர் செய்திருப்பது இண்டு கருதற்பாற்று.

"இடையில்லையாம் பொருளுண்டேன்
முதனில்லை யெய்தற்பூங்
கடையில்லையா மினபழமேவு மென
றனர் காதலிரன்
றடையில்லையாம் பதத் தெம்மான்
திருவெங்கையா யிழைக்குத்
தொடையில்லை வார்குழற் பூங்கொடி
யே சென்று சொல்லுகவே.

முதனிலை, இடைநிலை, கடைநிலை என்னும் இலக்கணச் சொற் பிரயோகங்கள் அமைந்துள்ளமை காணத்தக்கது.

சேவலுக்கு மம்புக்கு மாறுகொண்
டோடும் விழிமடவாய்
மாலுக்கு நண்மையாண மன்னையர்
வழக்கவல்ல
கோலுக்க [illegible]
கட்டு கோயிலாய்
பாலுக்கு வாதது [illegible]
வெங்கைப் பழமலையே.

தம்மை ஆதரித்த அண்ணாமலை ரெட்டியாரைப் பாராட்டுகின்றார் இப்பாடலில். அப்பெரியாரே வெங்கைக் கோயிலைக்கட்டி முடித்தவரென்ப.

சுரும்புகளிக்கும் பொழில் வெங்கை
வாணர்சுடர்க் கிரிமேல்
அரும்பு கடுக்கு முலையாயுலகுள
வலியெல்லாம்
விரும்பு கொடைத் தண்ணளி
கொக்கர் நம்மை வெறுப்பவரோ
கரும்பு கசப்பது வாய்க்குறையே
யிந்தக் காசினிக்கே

கரும்பு கசப்பது வாய்க்குறையே என்பது பழமொழி.

பாவலர்க்கு முன்பெண் பனையாக
வாணபனை பாட்டருளுந்
தேவர்க்கவரளுந் திருவெங்கை
வாணர்ற்றாக் கொருக்க
பூவாக்கி மாலையணிந்து பொன்னை
யொரு பெறப்பனையை
மாவாகக் கலையுமூர் நடுவீதி
வருகுவனே.

சம்பந்தர் ஆண்பனையைப் பெண்பனையாக்கிய அற்புதம் கூறப்பட்டுளது. இப்படியே பெரியபுராணச் சரிதங்கள் பல ஆங்காங்கு வாராய் விருத்தல் காணத்தக்கது.

மந்தாகினி யணி வேணிப்பிரான்
வெங்கை மன்னவனே
மோந்தார் முழல மணிமேகலை
[illegible] மகாளவம்தழங்க

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

# சுவேதாசுவதரோபநிடதம்

(திரு. ஐ. பொன்னையா, ஏழாலை)

## மூன்றுமத்தியாயம்

(முற்றொடர்)

(ரு) யா தே ருத்ரசிவா, தநூ அகோரா அபாபகாஸிநீ, தயா நஸ்தநுவா சந்தமயா கிரிஸந்தாபி சாகஸீஹி.

இ-ள்: (ஹே) ருத்ர-ஓ ருத்திர மூர்த்தியே, (ஹே) கிரிஸந்த-கைலாச மலையிலிருந்து உயிர்களுக்கு இன்பஞ்செய்பவரே, தே யா-உம்முடைய எந்த வடிவமானது, சிவா-மங்கலகரமான குணங்களுடையதும், அகோரா-இறப்புப் பிறப்புக்களின் கோரத்தை (துன்பத்தை) ஒழிக்கும் தன்மைகளுடையதும், அபாபகாஸிநீ - உயிர்களுக்குப் புண்ணிய வடிவத்தைக் கொடுக்கும் இயல்புகளுடையதுமாய் விளங்குகின்றதோ தயா சந்தமயா தநுவா-அந்த இன்பமாகிய வடிவங்கொண்டு, நஃ-எங்களை, அபிசாகசீஹி-பார்த்தருளுவீராக.

கு-பு: ருத்ரன் = ருத் - துன்பத்தை, த்ராவயதி-நீக்குபவன். எனவே இறப்பு பிறப்புத் துன்பங்களை நீக்குபவன் என்பது ருத்திரனென்னுஞ் சொற்குப் பொருளாகும். அவைகளைப் போக்கியன்றி இன்பஞ் செய்தல் கூடாமையின், ருத்திர நாமத்தினால் இம்மந்திரம் இறைவனை வழிபாடு செய்து இன்பந்தரும்படி வணங்குகின்றது. இன்பம் - வீட்டின்பம்.

பொ-ரை. கைலாச மலையிலிருந்து ஐம்பெருந்தொழில் செய்தல் வாயிலாக உயிர்களுக்குப் பேரின்ப வீட்டினைத் தந்தருளும் இறைவா! நாங்களும் அவ்வின்பவாழ்வினைப் பெறும்பொருட்டு எங்களைத் திருக்கண்ணோக்கஞ் செய்தருளும்.

(சு) யாமிஷும் கிரிஸந்த ஹஸ்தே பிபர்ஷ்யஸ்தவே, ஸிவாம் கிரித்ர தாம் குரு மா ஹிம்ஸீ: புருஷம் ஜகத்.

இ-ள்: கிரிஸந்த - மலையிலிருந்து இன்பஞ் செய்பவரே கிரித்ர -மலைக் காவலரே யாம் இஷும் - எந்தப் பாணத்தினை, அஸ்தவே - எய்யும் பொருட்டு, ஹஸ்தே பிபர்ஷி-கையில் பிடித்திருக்கின்றீரோ, தாம -அந்தப்பாணத்தினை, சிவரம்புருஷம் ஜகத்குருமங்கலமுடையதாகச்செய்யும்மனிதனையேனும் உலகத்தையேனும், மா ஹிம்ஸீ:-துன்புறுத்தல் வேண்டாம்.

(இவையிரண்டும் மந்திரங்களும் யசுர்வேதத்திலுள்ளன)

(எ) ததஃ பரம் ப்ரஹ்ம பரம் ப்ருஹந்தம் யதாநிகாயம் ஸர்வபூதேஷு கூடம், சர்வஸ்யை கம்பரிவேஷ்டிதாரமீசம் தம் ஜ்ஞாத்வா அம்ருதா பவந்தி.

இ-ள்: ததஃ- பின்னர், பரம்-உலகுயிர்களுக்கு வேறானவரும் ப்ரஹ்மபரம் ப்ருஹந்தம்-பிரமா முதலிய காரணேசுரர்களுக்கு வேறான பெரும்பொருளாயுள்ளாரும்யதாநிகாயம்-சரீரந்தோறும் விளங்குவரும், ஸர்வபூதேஷு கூடம் - எல்லா ஆன்மாக்களிலும் மறைந்திருப்பவரும், விஸ்வஸ்ய ஏகம்பரிவேஷ்டிதாரம்-சரம் அசரமாகிய எல்லாப் பொருட்களிலும் ஒருவராய் வியாபித்திருப்பவருமாகிய தம் ஈசம்-அந்த சிவபெருமானை, ஜ்ஞாத்வா-அறிந்து, அம்ருதாபவந்தி-சிவத்துவத்தையடைகிறார்கள்.

பொ-ரை: உலகுயிர்களுக்கு வேறானவரும், அவற்றை ஐந்தொழிற்படுத்தும் பிரமா விட்டுணு ருத்திரன முதலிய காரணேசுரர்களுக்கு வேறான பரம்பொருளாயுள்ளவரும உள்ளும் புறம்பும ஒக்க நிறைந்திருப்பவராயினும், எவர்களாலுமறிதற்கரிய ஒருவருமாகிய சிவபெருமானை அறிந்து சிவமாந்தன்மைப் பெருவாழ்வையடைகிறார்கள்.

(அ) வேதாக மேதம் புருஷம் மஹாந்த மாதித்யவர்ணம் தமஸ பாஸ்தாத், தமேவ விதித்வா அதிம்ருத்யுமேதி நாந்ய: பந்தா வித்யதே அயநாய.

இ-ள்: ஏதம்புருஷம்- இந்தப் புருடனை, மஹாந்தம்-பெரியோராகவும் ஆதித்யவர்ணம் - சூரியன் போன்ற (அருள்) ஒளியுடையராகவும், தமஸ: பாஸ்தாத் - இருளுக்கு அப்பாலுள்ளவராகவும், அஹம்வேத-நான் அறிகிறேன், தமேவவிதித்வா-அவரை இவ்வாறு அறிந்து, ம்ருத்யும் அத்யேதி-மரணத்தைக் கடக்கிறான், அயநாய - வீட்டினை அடைதற்கு, ந அந்ய பந்தா-வேறு வழி அறியப்படவில்லை.

பொ-ரை: சிவபெருமானை; பெரியோராகவும் அருளொளியோடு கூடியவராகவும் இருளுக்கு அப்பாலுள்ளவராகவும் அறிகிறேன். இவ்வாறு அறிதலைவிட மோட்சத்திற்கு வேறுவழியில்லை.

(கூ) யஸ்மாத்பரம் நா பரமஸ்தி கிஞ்சித்யஸ்மாந்நாணீயோ ந ஜ்யாயோ அஸ்தி கஸ்சித், வ்ருக்ஷ இவ ஸ்தப்தோ திவி திஷ்டத்யேகஸ்தேநேதம் பூர்ணம் புருஷேண ஸர்வம்.

இ-ள்: யஸ்மாத் - எவரிலும் பார்க்க, பரம் அபரம் கிஞ்சித் ந அஸ்தி மேலானதும் கீழானதும் ஒன்றுமில்லையோ, யஸ்மாத்-எவரிலும் பார்க்க அணீய: ந அஸ்தி- நுண்ணியதில்லையோ, கஞ்சித் ஜ்யாய:ந அஸ்தி-பெரியதொன்றில்லையோ, ய:-எவர், வ்ருக்ஷ இவ-விருட்சம்போல, திவி-சுவர்க்கலோகத்தில், ஸ்தப்த: திஷ்டதி- நிலையாய் நிற்கிறாரோ, (ஸ:) ஏக:-அவர் ஒருவராலும், தேந புருஷேண-அந்தப் புருஷனால், இதம் ஸர்வம் பூர்ணம்- இந்த எல்லாம் நிரம்பியிருக்கிறது.

பொ-ரை: மேல கீழற்றவரும், சிறியதிற் சிறியரும் பெரியதிற் பெரியரும் சுவலோகத்தில் நிலைபெற்றிருப்பவருமாகிய சிவபெருமான் இவ்வுலகம் முழுவதிலும் நீக்கமற நிறைந்திருக்கிறார்.

—தொடரும்

# சரசாலைக் கொலை வழக்கு முடிவு

## எதிரிக்கு மரண தண்டனை

யாழ்ப்பாணம் சுப்ரீம்கோட்டில் நீதிபதி திரு. ஈ. ஜீ. பி. ஜயதிலக்கா கே. சி. அவர்களதும் ஆங்கிலம் பேசும் ஜூரிகளினதும் முன்பாக சரசாலைவாசியாகிய முருகேசு சின்னத்தம்பி என்பவரைக் கடந்த மார்ச்மாதம் 1ந் திகதியளவில் பொல்லால் அடித்துக் கொலைசெய்ததாகச் சரசாலை வாசியாகிய செல்லன் பொன்னையன் என்பவர்மீது குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கு ஏறக்குறைய ஒரு கிழமைக்கு முன்பதாகவும் விசாரணை செய்யப்பட்டு வேறு ஜூரிமார்களுக்கு முன்பாக விசாரணை செய்யப்படல் வேண்டுமெனத் தவணையிடப்பட்டு இப்போது விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்காளி சார்பாக முடிக்குரிய நியாயவாதி திரு. ஜே. ஏ. பி. மசூறியரும் எதிரியின் சார்பாக நியாயதுரந்தரர் திரு. சாம். ஏ. சபாபதியின் அநுசரணையின்பேரில் நியாயவாதி திரு. எஸ். தம்பித்துரையும் விவாதித்தனர். முதலாவதாக சரசாலை வாசியாகிய கந்தையாபேரம்பலம் கொடுத்த சாட்சியத்தின் சாராம்சம் வருமாறு:-

"நான் கடுகு வியாபாரஞ் செய்வது வழக்கம்; கடந்த மார்ச் மாதம் 1ந் திகதியன்று மத்தியானம் 12 மணியளவில் நானும் வேறு மூவருமாக என்னுடைய மாட்டுவண்டியில் பளைக்குச்சென்றோம். அங்கு ஓரிடத்தில் இருந்த கடுகை ஏற்றிக்கொண்டு அடுத்த நாட் காலை 8 மணியளவில் அங்கிருந்து புறப்பட்டுச் சரசாலையை நோக்கி வரும்போது நான் வண்டியைச் செலுத்தி வர மற்றையோர் நடந்து வண்டியோடாக வந்தார்கள். சரசாலைச்சுடலைக்குப் பக்கமாக எனது வண்டி வரும்போது சரசாலை நுணாவிலைச் சேர்ந்த சவம் ஒன்று ஏறக்குறைய 30 பேர்களுடன் கொண்டு வரப்பட்டது. சவ வண்டியைத் தாண்டி ஆயபாற போனதன் மேல் ஆச்சவத்துடன் கூடிவந்த இவ்வெதிரியும் வேறு மூவருமாக [illegible] பாட்டப்பட்டிருந்த எனது வண்டிக்கு முன்பாக வந்து சவத்தை எரிப்பதற்குக் கந்து தாச மசாலை [illegible] கேட்டார்கள் நானும் [illegible] முருகேசு - சின்னத்தம்பியும் சின்னையா - வல்லிபுரமுமாக இல்லை என்று சொன்னோம். மண்டும் [illegible] வராதிருந்தனர். நாங்கள் மறுக்கவே எதிரி வண்டியிலிருந்து கட்டைபோலும் [illegible] பொல்லை ஆகுத 'தருகிறீர்களோ மாட்டீர்களோ' என்று சொல்லிக்கொண்டு முருகேசு சின்னத்தம்பியின் உச்சந் தலையில் அடித்தான். உடனே ஐயோ என்று கத்திக்கொண்டு [illegible] சின்னத்தம்பி கீழே விழுந்தார். அதன்மேல் சரவணை என்பவன் மாட்டுக்குப் பூட்டியிருந்த பூட்டாங்கயிற்றை அறுத்தான்; வண்டி மறுபாரம் அடிக்க நானும் [illegible] போனேன். அதனைக்கண்ட எதிரி எனக்கும் கல்லால் எறிந்தான். அதால் எனது வலதுமுழங்கையில் பட்டுக் காயம் உண்டாகியது.

சரவணை யென்பவன் எதிரியின் கையிலிருந்த பொல்லைப் பறித்து வலப்புறத்துக்கு அடிக்க வரவுமே [illegible] நான் வண்டியிலிருந்து குதித்து பயமுற்று [illegible] எனது வீட்டுப் பக்கமாக ஓடினேன். இடைவழியில் சரவணை கந்தையா என்பவரைச் சந்தித்துச் சொல்லிய சாட்சியத்தைப்பற்றிச் சொன்னேன். அவர் பொலீசுக்குப் போய் முறையிடச் சொல்ல பொலீசுவிடம் சென்று எனது முறைப்பாட்டைச் சொன்னேன்; பின்னர் சம்பவம் நடைபெற்ற இடத்திற்குப் போகும்போது காலகதியடைந்த சின்னத்தம்பியை வண்டியிற் கொண்டு வந்தார்கள். நான் கதைத்துப் பார்த்தேன். அவர் அறிவு மயக்கமாயிருந்ததால் என்னுடன் பேசவில்லை. சரசாலையிலுள்ள வெள்ளாளருக்கும் நளவருக்கும் மிடையில் அறுவடை விஷயமாக ஏற்பட்ட திருப்தியின்மையே இதற்குக் காரணமாக இருக்கவேண்டும்."

அதன்மேல் சாவகச்சேரி ஜுடிஷல் மெடிக்கல் உத்தியோகத்தர் டாக்டர் எஸ். திருநாவுக்கரசு சாட்சியங் கூறுகையில் இப்பொல்லினால்தான் அடித்திருக்கவேண்டுமென்றும் மண்டையோடு சுக்கல் சுக்கலாக வெடித்திருந்ததென்றும் அடுத்தநாள் காலையில் காலகதியடைந்தவர் மரணமானாரென்றும் தாமே பிரேத பரிசோதனை செய்ததென்றும் கூறினர்.

அப்பால் சின்னையா-வல்லிபுரம் சரவணை-கந்தையா முதலியோர் சாட்சியங் கூறினர்கள்.

விசாரணை முடிவெய்தியதின் மேல் ஜூரிகள் எதிரியைக் கொலைக்குக் குற்றவாளியெனத் தாங்கள் ஏகமனதாக அபிப்பிராயப்படுவதாக நீதிபதிக்குத் தெரிவித்தனர்.

அதன்மேல் நீதிபதி எதிரியின் தாயை அழைத்து எதிரியின் வயதென்னவென்பதை உண்மையாகத் தெரிவிக்கும்படி கேட்க, எதிரியின் தாயார் இருபத்திரண்டு வயதெனத் தெரிவித்தாள். அதன்பின்னர் நீதிபதி எதிரியை நோக்கி ஏன் உனக்குத் தூக்குத்தண்டனை விதிக்கக்கூடாது என்பதற்குக் காரணங் காட்டுமாறு கேட்க, எதிரி நான் கொலைசெய்யவில்லையெனக் கூறினான்.

உடனே நீதிபதி வருகிற செப்டம்பர்மாதம் 6ந் திகதியன்று கண்டியிலுள்ள போகம்பறைச் சிறைச்சாலையில் உனது உயிர் போகும்வரையும் உன்னைத் தூக்கிலிட்டுக் கொல்லப்படும் எனத் தீர்ப்புக் கூறியதுடன் ஜூரிகள் இரக்கங்காட்டுமாறு கேட்டுக்கொண்டதால்தான் இரக்கங்காட்டுமாறு எழுதுவதாகவுந் தெரிவித்தார்.


## விற்பனவு விளம்பரம்

25 பரப்பு விஸ்தாரங்கொண்ட நிலத்தில் 8 அறைகளைக்கொண்ட நிலைதரமான மேல்வீட்டுக் கடைகள்; சாவகச்சேரிச் சந்தைக் கணித்தாகக் கண்டிக்குப்போகும் தெருவில் வல்லிபுரம் மில்ஸுக்கு எதிரில் உள்ளன. காலஞ்சென்ற டாக்டர் A. N. குமாரசுவாமி அவர்களுக்கு உரியது. 45000 ரூபாய் மதிப்பு.

சாவகச்சேரிப் பட்டணத்திற்கு அணித்தாகப் பல நெல் வயல்களும் வேறு காணிகளும், பரப்பு 100 ரூபா மதிப்புள்ளவை விலைக்கிருக்கின்றன.

X

C/o The Manager
Hindu Organ
Vannarponnai

Mis 86 7-8.44


## வியாபாரத்திற் கழகு விளம்பரஞ் செய்தல்

# குறிப்புக்கள்

கொம்பனித்தெருவைச் சேர்ந்த யூனியன் பிளேஸிலிருக்கும் பூநக் பேர்ண்ட் லிமிட்டெட்டிலிருந்து 5000 ரூபாய் காணமற் போய்விட்டதாகத் தெரிகிறது.

0 0 0

வேருவிலை வாசியான டாக்டர் பாயசூரியாவின் வீட்டிலிருந்து நகைகள் கண்ணாடிச் சாமான்கள் பீங்கான் கோப்பைகள், துணிமணிகள் எல்லாம் சேர்ந்து 4000 ரூபாய் பெறுமதியான சாமான்கள் திருடப்பட்டதாம்.

0 0 0

அமெரிக்க வெடிகுண்டு விமானங்கள் ஹாங்காங்கைத் தாக்கினவாம்.

0 0 0

வத்திக்கான் பத்திரிகையாகிய 'ஆப்ஸர் வெட்டர் ரோமானோ' வில் 'யுத்தத்தினால் ஒருவித இலாபகரமான விளைவும் ஏற்படாதாகையினால் யுத்தத்தை உடனே நிறுத்திவிடவேண்டும்' என்று வற்புறுத்திக் கூறப்பட்டிருக்கிறதாம்.

0 0 0

இத்தாலியில் எட்டாவது படையைச் சேர்ந்த ஸைனியங்கள் பிளாரென்ஸ் நகரை அடைந்துவிட்டனவாம்.

0 0 0

"இருவாரத்துக்குள் அல்லது இரண்டுவாரத்துக்குள்ளாகவோ ஜெர்மன் பூமியில் யுத்தம் நடைபெற ஆரம்பித்துவிடும்" என்று ஆஸ்திரேலிய பிரதம மந்திரி மிஸ்டர் கர்டின் கூறினாராம்.

0 0 0

"நாங்கள் ஜனநாயகத்துக்காகவே போராடுகிறோம், யுத்தத்துக்குப் பிறகு இந்தியா பூரண சுதந்திரம் பெறும்" என்று காந்திஜியைச் சந்தித்த பிரிட்டிஷ் ராணுவத்தைச் சேர்ந்த சிலர் கூறினாராம்.

0 0 0

அமெரிக்கப் படைகள் குவாம் தீவில் 3 நகரங்களைக் கைப்பற்றினவென்று பசுபிக் கடற்படைப் பிரதம சேனாதிபதி ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தார்.

0 0 0

[illegible] இத்தாலியிலே 12 நாட்கள் தங்கிய பின் [illegible] லண்டன் நகரத்தைச் சேர்ந்தாராம்.

0 0 0

ஹிட்லரைக் கொல்லச் சதி செய்த குற்றச்சாட்டின்மேல் மேயர் கார்லகோயர் [illegible] நடைபெறுகிறதாம்.

0 0 0

ஜேர்மன்-துருக்கி உறவு முறிவைத் தடுப்பதற்காக ஜேர்மன் தூதர் வொன் பேப்பன் கடைசியாகச் சில முயற்சிகளைச் செய்வாராம்.

0 0 0

பிரிட்டனிலிருக்கும் பிரஞ்சு தேசாபிமானப் படைகள் [illegible] பாதைகளைத் துண்டித்து ஜேர்மானியர்களுக்கு இடைவிடாது தொந்தரவு அளித்து வருகின்றனவாம்.

0 0 0

டச்சு நியூகினியில் கில்விங்க் குடாப்பகுதியில் தங்களுடைய பல விமான கூடங்களிலிருந்து ஜப்பானியர் பின்வாங்கிவிட்டனராம்.

0 0 0

ஜெர்மன் பறக்கும் வெடிகுண்டுகள் [illegible] வருவதை எடுத்துக்காட்டி எச்சரிக்கை [illegible] லண்டனில் புதுமாதிரியான விசேஷ எச்சரிக்கை [illegible] உபயோகிக்கப்படுகின்றதாம்.

## பிரெஞ்சுப் படைகளின் அட்டூழியம்

ரோம் யூலை 30—

சில நாட்களுக்கு முன்பு பிரெஞ்சுமொரோக்கோ துருப்புக்கள் செய்த அட்டூழியங்களை இத்தாலிய ஆபேதவாதக் கட்சிப் பத்திரிகை இப்பொழுது வெளியிடுகிறது.

மொராக்கோ துருப்புகளின் கேவலமான கோரிக்கைகளுக்கு இணங்க மறுத்ததற்காக ஸ்திரீகளையும் சிறிய குழந்தைகளையும் அவர்கள் ஓடும் ரயிலிலிருந்து வெளியே தூக்கி எறிந்தார்களென்றும் இதன் விளைவாக இரண்டு ஸ்திரீகளும் இரண்டு சிறிய குழந்தைகளும் கொல்லப்பட்டனர் என்றும் மற்றும் இரண்டு ஸ்திரீகள் காயமடைந்தனரென்றும் அப்பத்திரிகை கூறுகிறது.

பிரெஞ்சு மொராக்கோ துருப்புக்களை ஏற்றிச்செல்லும் ஒரு ரயிலில் ஐந்து ஸ்திரீகளும் பல குழந்தைகளும் ஏறிக்கொண்டனரென்றும், ரயில் ரோமுக்கருகில் வந்தவுடன் அந்த ஸ்திரீகளுக்குத் துருப்புகள் ஆபாஸமான கோரிக்கைகளை வெளியிட்டனர் என்றும் ஐந்து ஸ்திரீகளில் நான்குபேர்கள் அக்கோரிக்கைகளுக்கு இணங்க மறுத்துவிட்டனரென்றும் இவ்விளைவாக அந்த நான்கு ஸ்திரீகளும் அவர்கள் குழந்தைகளுடன் ஓடும் ரயிலிலிருந்து வெளியே தூக்கி எறியப்பட்டனரென்றும் உயிர்தப்பிய ஒரு ஸ்திரீ கூறினாள்.

இந்தச் சம்பவம் சம்பந்தமாக பல ரோம பத்திரிகைகள் கண்டனமாக எழுதியிருக்கின்றன. குற்றஞ்செய்தவர்களைத் தண்டிப்பதாக அதிகாரிகள் உத்தரவாதம் கூறவில்லையென்றும் இதுபற்றி அவர்கள் வருத்தத்தைக்கூட தெரிவிக்கவில்லையென்றும் அப்பத்திரிகை தெரிவிக்கின்றது.

## அறிவுரைத் திரட்டு

6. எளியவர்களிடத்திலும் கடவுளிருப்பதை நீ மறந்துவிடாதே.

7. சர்வஜீவராசிகளிடத்தும் கடவுள் இருப்பதால் நீ மற்றவர்கட்குச் செய்யுந் தீமை கடவுளுக்கே செய்ததாக முடிகிறது.

8. எந்தத் தொழிலையும் செய்யும் பொழுதும் கடவுட் சிந்தனையோடு அவருக்கே அர்ப்பணமாகச் செய்.

9. ஈசுவர சிருஷ்டியின் அற்புதங்களை ஒருமணிநேரம் ஆழ்ந்து ஆலோசித்திடு. அது கடவுளை நோக்கி நூறு ஆண்டு ஜெபப்பதிலும் மேலானது. ஒருவரை நம் நினையாவிடினும் அவர் நமக்குச் செய்த உபகாரங்களை நினைத்து நினைப்பின் அதுவே அவரை நினைப்பதைவிட ஆயிரம் பங்குமேல். அதுவே அன்பின் ஊற்றுப்பெருக்குக்கு, வெகு சுலபமான பாதை.

10. அன்பு என்பது ஒருவர்க்கொருவர் காட்டும் பிரியம். அன்பைவாங்க அன்பைக்காட்டவேண்டும்.

11. சத்தியம், அன்பு, தெய்வம் இவைகளிடத்தில் அளவுகடந்த நம்பிக்கை இருக்கவேண்டும்.

## ஸ்ரீ முன்னேஸ்வரத்து முன்னைநாத சுவாமி கோவில் மகோற்சவம்

இவ் விலங்காபுரியில் பழமை பெற்று விளங்கும் ஸ்ரீ முன்னேஸ்வர மகாக்ஷேத்திரத்தில் தாரண வருடம் ஆடி மாதம் 22-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை துவஜாரோகணமாக உற்சவங்கள் நடைபெறும்.

விசேஷ தினங்கள்

பிக்ஷாடனர் திருவிழா ஆவணி 14உ (29 8-44) செவ்வாய்க்கிழமை

நடேசர் திருவிழா ஆவணி 15உ (30-8-44) புதன்கிழமை.

வேட்டைத் திருவிழா ஆவணி 16உ (31-8-44) வியாழக்கிழமை.

தேர்த் திருவிழா ஆவணி 17உ (1-9-44) வெள்ளிக்கிழமை.

தீர்த்தத் திருவிழா ஆவணி 18உ (2-9-44) சனிக்கிழமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேகவியோகம்

### திரு. R. மயில்வாகனம்

இளைப்பாறியிருக்கும் அப்போதிக்கரி, திரு. R. வல்லிபுரமவர்களின் சகோதரராகிய திரு. R. மயில்வாகனமவர்கள், சிலநாட்களாகத் தம்மைப்பீடித்தநோய்காரணமாகத் தமது குடும்பத்தார் கதற யூலை 28ந்திகதிவெள்ளிக்கிழமைஇவ்வுலகவாழ்வைநீத்தனர். இவரைப்பிரிந்து வருந்தும் குடும்பத்தார்க்கு எமது அனுதாபம் உரித்தாகுக. இவரது ஆன்மா சாந்தியடைவதாக.

### திரு. R. மயில்வாகனம்

மலேயாவில் 35 வருட காலமாக அரசாங்க சேவையில் இருந்து இளைப்பாறிய திரு. R. மயிலவாகனம் என்பவர் தம்மைப் பீடித்த நோய் காரணமாக யூலை மாதம் 24ந் திகதி, தமது மனைவிமக்கள் புலம்ப இணுவில் கிழக்கிலுள்ள தமது 'பதமினி வாச'த்தில இவ்வுலக வாழ்வை நீத்தனர். இறக்கும் போது இவருக்கு வயது 68 இவருக்கு 5 ஆண்களும் 4 பெண்களும் உள்ளனர். இவரைப் பிரிந்து வருந்தும் மனைவிக்கும், பிள்ளைகளுக்கும் எமது அநுதாபம உரித்தாகுக. இவரதுஆன்மா சாந்தியடைவதாக.

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

( † இசைத்தட்டு )

### செவ்வாய் ஆகஸ்ட் 8

காலை: 7-45 சீதாரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 குற்றாலக் குறவஞ்சி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 டி ஆர் கலியாண கிருஷ்ணஐயர் வீணை 9 முடிவு.

1 கதம்பம்† 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 கே ஆர் வெங்கடாசலம் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை: 5 டி ஆர் கலியாண கிருஷ்ண ஐயர் வீணை 5-45 இசைப்பயிற்சி 6 கே ஆர் வெங்கடாசலம் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7.15 நாமும் யுத்தமும் பேச்சு 7-30 அறிவிப்புள் 7.35 தமிழில் செய்திகள் 7-45 ஆறுமுகத்தின் ஆராய்ச்சி நாடகம் 8 மதராசில உள்ளபடி 9 வயலின் கோட்டு வாத்யம்† 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 அருள் உதயம் இசை நாடகம் 10இசைவேளை† 10-30 முடிவு.

### புதன் ஆகஸ்ட் 9

காலை: 7-45 ஸீதாரம்பம் 7-50தமிழில் செய்திகள் 8 வானொலி வாத்யகோஷ்டி 8–15 ஆங்கிலத்தில செய்திகள் 8-30 கே ஆர் தங்கவேலு பாட்டு 9 முடிவு.

1 கதம்பம்† 1-30ஆங்கிலத்தில்செய்திகள் 1-40 வி பி ஞானசுந்தரம் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை: 5 கே ஆர் தங்கவேலு பாட்டு 5-45 இசைப்பயிற்சி 6 டி ஆர் நவனீதம் புல்லாங்குழல் 6-30 ஆங்கிலத்தில்செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 தாளவாத்தியக் கச்சேரி 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 திரை இசை† 8-15 இவை போதும் பேச்சு 8-30 டி ஆர் நவனீதம் புல்லாங்குழல் 9-20ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 ஜி ஐ 10 ஐரோப்பியசங்கீதம்† 10-30 முடிவு.

### வியாழன் ஆகஸ்ட் 10

காலை: 7-45ஸீதாரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 திருச்சி வாத்யகோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 காரைக்கால் சுந்தர காமாக்ஷி பாட்டு 9 முடிவு.

1 கதம்பம்† 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 கும்பகோணம் டி ஆர் கிருஷ்ணன் வயலின் 2 தமிழில் செய்திகள் 2.05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை: 5 காரைக்கால் சுந்தரகாமாக்ஷி பாட்டு 5-45 இசைப்பயிற்சி 6 கும்பகோணம் டி ஆர் கிருஷ்ணன் வயலின 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6.40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 செய்திவிளக்கம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 தஞ்சாவூர் கே பொன்னையா பிள்ளை பாட்டு 9 வைகை இசைச் சித்திரம் 9-20 ஆங்கிலத்தில்செய்திகள் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 ஐரோப்பிய சங்கீதம்† 10 இசைவேளை† 10-30 முடிவு.

## அக்கினி காரியஞ் செய்பவர்கள் கவனிக்கவேண்டியது

(பிரம்மஸ்ரீ, ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள், சுதுமலை)

வடமேற்குப்பக்கத்தில் அறுகோண குண்டம்; அது உச்சாடனம் (அகாலுதல் அல்லது ஏவுதல்) எனனுங் கருமத்துக்காம்; வடக்கே பத்மகுண்டம்; அது புஷ்டியைச் செய்வதற்காம். வடகிழக்கு மூலையில எண்கோண குண்டம்; மிகவும் அபயத் (அச்சமின்மையை) தைக் கொடுத்தற்காம், கிழக்குத்திக்கில் நாற்கோண குண்டம்; அது எல்லாக் கர்மங்களையுங் கொடுத்தற்காம். அக்கினி மூலையில யோனிகுண்டம்; அது எப்போதும உபகாரத்தைச் செய்யும. தெற்கே அர்த்த சந்திர குண்டம்; அது துவேஷத்தைக் கொடுத்தற்காம். தென்மேற்கு மூலையில திரிகோண குண்டம்; அது மாரணத்தைச் செய்தற்காம. மேற்கே விருத்தகுண்டம; திருப்தியைக் கொடுத்தற்காம. உத்தமம்.

இந்தக் காமிய குண்டங்களெல்லாம பிரதிஷ்டைக்கு உதவா. ஆன்மார்த்த விஷயங்கட்காம். இந்த ஆன்மார்த்த கருமத்துக்குரிய குண்டங்களைப் பிரதிஷ்டா கருமங்களுக்குப் கொடுகின்றார்கள். அது பெருங் குற்றம்.

வத்ரைகீ கரணமாவது ஐந்து முகங்களையும் ஒரேதரமாக உச்சரித்து அக்கினிதிக்கிலிருந்து வாயு திக்குவரையில், நிருதிதிக்கலிருந்து ஈசானதிக்குவரையி லிடைவிடாமற் பெருகு நெய்த்தாரையினலே அந்தந்த இஷ்டமான முகத்தில் மற்றைய முகங்களெல்லா மடங்கினதாகப் பாவித்து ஐந்தமுக மூர்த்தமாய்த் திறந்து குண்டத்திற்குச் சரியாக இருப்பதாகப் பாவித்து ஆகுதி கொடுப்பதாம,

இந்த வக்தரைகீகரணமானது முத்தி விஷயத்தில் சத்தியோசாதாதிக்கிரமமாக ஈசானத்திற் செய்யப்படும், போகவிஷயமானல் அதிகாரமாத்திரம் சத்தியாதியாகச் செய்து சந்தானமும் ஏகீகரணமும் ஈசானதியாகச் செய்யவேண்டும். நித்திய கர்மத்தில் சத்தியோசாத வக்த்ரத்தில மற்ற வக்த்ரங்கள் அடங்கினதாகப் பாவித்து அந்த வக்த்ரத்தை குண்டம் பிரமாணமாகப் பாவிப்பது வக்திரைகீகரணமாகும்.

அல்லது ஏனைய வக்த்ரங்களைக் காட்டிலும் ஈசானவக்த்ரம் எல்லாக் கர்ம பலன்களையுங் கொடுக்குமாதலால் அது பிரதானமாகும். ஆகையால் ஈசானமுகத்திலே ஏனைய முகங்கள் அடங்கினதாகப் பாவித்து அந்தந்த முகங்களுக்குச் சொல்லிய பலன்களை ஈசானமுகங் கொடுக்குமென்று பாவிக்கவேண்டும்.

இப்படி வக்த்ரைகீகரணஞ் செய்யப்பட்ட ஊர்த்துவமுகத்தில இரண்டை முதலான ஏழு நாக்குகளுக்கும் அபிகாரசந்தான ஏகீகரணங் களை செய்யவேண்டும்.

சந்தானமாவது சமஷ்டியாக உச்சரித்து இரண்டு முகங்களிலும் பேரானு கொடுப்பதாம். சமஷ்டியென்பது சுருக்கம் அல்லது சமுகம். வக்திரமுகம். இவைகளை தவிர வேறாவருண்டு என்றுண்டென்று சிலர் கூறுவர். யோசிக்கவேண்டும்.

## முத்தமிழ்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

"இசையொடு சிவணிய யாழினுலு நாடகப் பொருளும்" (பெருங்கதை)
'பண்கனியப் பருகிப் பயனுடைகம் கண் கனியக் கவர்ந்துண்"

நாடகம் சமயசம்பந்தமாகவும் பெரியோர்களுடைய சரித்திர சம்பந்தமாகவும் இயற்றப்பட்டு இருந்தால் காண்போர்களுக்குப் பலவகையான நற்குண நற்செய்கைகளும் கடவுட்பக்தியும் உண்டாகும்என்பது ஆனேரர் கருத்து. நாடகம் யாவருக்கும் மிக்க இன்பத்தை அளித்துத் துன்பத்தைப் போக்கும் தன்மையது.

நாடகத்திற்குப் பரமாசாரியர் சிவபெருமானே யென்று பழைய நூல்களிலிருந்து அறியக்கிடக்கின்றது.

மிகுந்த உழைப்பால் துன்பமுற்றவர்களின் அயர்ச்சியை நீக்குவதற்கு நாடகம் சிறந்த கருவியாக அக்காலத்தில இருந்துவந்ததென்று தெரிகிறது.

பரமசிவன்ஒருகால் திரிபுரத்தை எரித்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. திரிபுரங்களை எரித்தபொழுது அங்கே சூழ்ந்திருந்த தேவர்களுடைய வெப்பத்தையும் அயர்ச்சியையும் நீக்குவதற்கு 'திரிபுரவிசயம்' என்னும நாடகம் நடிக்கப்பெற்றதென்றும், அமிர்தம்எடுத்தற்காகத் திருப்பாற்கடலைக் கடைந்த தேவாசுரர்களின் அயர்ச்சித் துன்பத்தை நீக்குவதற்கு, 'அமிர்த மதனம' என்னும நாடகம் நடிக்கப்பெற்றதென்றும் வடமொழி வாணர் கூறுவர்.

முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தில அரங்கேற்று காதையுள் அதன் உரையாசிரியர் நாடகத்திற்குரிய அரங்கம் அமைக்கும இடம, அவ்வரங்கத்தின உயரம, அதற்குரிய வாயில்கள் முதலிய விஷயங்களைக் கூறியிருக்கின்றனர். அதனுல் பண்டைக்காலத்து நாடக அரங்கு மிகச் செவ்வனே அமைக்கப்பெற்றிருந்தமை விளங்கும்.

தமிழ்மொழி பெருகித் தன்னிலை குன்றிய இக்காலத்து அதன் பாகுபாடுகளாகிய முத்தமிழின்சிறப்பையான கூறுதல எளிதன்றாயினும் என சிற்றறிவுக்கெட்டியவாறு சுருக்கக் கூறினேன். இண்டுக் குறை மசற்றிக் குறையேற்றுக்கொள்வது அறிவாளிகள் கடனாம.

## வெங்கைக்கோவை

4-ம் பக்கத் தொடர்ச்சி

சிந்தாமணியுந் தருக்கோவையு
மெழுதிக் கொளினு
நந்தாவுரையை யெழுத லெவ்வாறு
நவ்ன்றருளே

இப்பாடலில் திருக்கோவையார், சீவக சிந்தாமணி மணிமேகலை முதலிய தமிழ் நூற்களின் பெயர்களைத் தொனிதல் பாராட்டத்தக்கது. அந்நூல்களிடத்து ஆசிரியர் கொண்டுள்ள பெருமதிப்பு இதனால விளங்குகின்றது.

இக்கோவையுள் ஒவ்வொரு பாடலுஞ் சொல்நயமும பொருள ஆழமும உள்ளதாயிருத்தலின இதனினும் இது சிறந்ததென்று எடுத்துக் காட்டற்கு இயலாது, ஆதலால் அகதுமிக்குமாகச் சில பாடல்களின சிறப்பை எடுத்துக் காட்டுவும்.

## 'நியூஸ் கிரானிகல்' வேண்டுகோள்

லண்டன் யூலை 31—

காமன்ஸ் விவாதம் அடிக்கடி இந்தியர்களுக்கு ஏமாற்றத்தையளித்துவருகிறதென்று நியூஸ் கிரானிகல் தனது தலையங்கத்தில் குறிப்பிடுகிறது.

சென்றவார விவாதமும் பழைய படியேதான் இருந்தது. ஏனெனில மிஸ்றர் அமெரி 'மாறுதலில்லை' என்ற பழைய பல்லவியையேதான் பாடுகிறார். ஏமாற்றமடைந்தால் இந்தியத் தலைவர்கள் செயலற்று இருக்கக்கூடாது. அவர்களிடையே ஒப்பந்தமேற்படுவதுதான முட்டுக்கட்டையைத் தீர்ப்பதற்கு ஒரேவழி. காங்கிரசுக்கும் முஸ்லிம லீக்குமிடையே சமரஸமேற்பட ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் அரும்பாடுபட்டிருக்கிறார். இப்பொழுது ஜனுப்ஜின்னு காந்தியை பம்பாயில் சந்திக்க ஒப்புக்கொண்டிருக்கிறார், இது முன்னேற்றத்துக்கான முக்கிய நடவடிக்கையாகும்".

## காங்கிரஸகாரரின் வேலை

பஞ்சகினி யூலை 31—

காங்கிரஸ்காரர்கள் என்ன செய்யவேண்டுமென்பதை விளக்கி, சீக்கிரத்தில் காந்திஜி ஒரு அறிக்கை வெளியிடுவார் எனத் தெரிகிறது.

சகஜமான வேலைகளைக் கவனிப்பது சம்பந்தமான முக்கியமான பிரச்னைகளைக் குறித்து நேற்று மகாத்மாவைச் சந்தித்த பம்பாய் மேயர் ஸ்ரீ நகின்தாஸ் மாஸ்டர் அவருடன விவாதித்ததாகத் தெரிகிறது அதற்கு முன்பாக ஸ்ரீ நகின்தாஸ் பம்பாயிலும பூனவிலும உள்ள பிரபல காங்கிரஸ்காரர்களுடன் சம்பாஷித்தார் அதன் விவரத்தை அவர் காந்திஜிக்கு எடுத்துரைத்திருக்கலாம.

கொடிவணக்கம் உள்பட பல சகஜமான வேலைகளைப்பற்றி ஸ்ரீ மாஸ்டர் மகாத்மாவிடமிருந்து விளக்கம கோரியதாகவும் தெரிகிறது. அதிகாரிகளுடன பிணக்குக் கொள்ளாமலும் பலாத்காரமலும பொதுக் கூட்டங்கள் நடத்துவதைப்பற்றியும பிரஸ்தாபிக்கப்பட்டதாம்.

உங்கள் கண்கள் விலையுயர்ந்தவை
உங்கள் கண்ணாடிகளைக் கீழ்க்காணும்
பிரசித்திபெற்ற கம்பெனியில்
வாங்குங்கள்!
வீனஸ் ஓப்ரிக்கல் கம்பெனி
28, மெயின் ஸ்ட்ரீட், யாழ்ப்பாணம்.
Mis 60 31—7—44&.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகோள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Monday, 7th, August, 1944.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org